**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2014**

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலீச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் முன்னைய சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாக பரந்துள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவுநீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றி அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம், சுகாதாரம் மற்றும் நல்ல நிலைமையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 செப்தெம்பர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையான சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2015 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 11 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்நன.

(அ) மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 28.2 மில்லியன் தொகையான பிடிகாசு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 செப்தெம்பரில் முடிவுறுத்தப்பட்டிருந்த கண்டி நகர கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட வேறு நன்கொடையளாரால் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தால் ரூபா 1.4 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் தவறுதலாக இந்த செயற்திட்டத்தின் நடைமுறைப்பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதி**

முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த மற்றும் உரிய அமைச்சு என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2014 இல் ரூபா 746 மில்லியன் வெளிநாட்டு நிதிகளின் பெறுகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு வளங்களின் பெறுகைகளில் ஏற்பட்ட கிரயங்கள் ரூபா 770.6 மில்லியன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழமைபோல, கொள்வனவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பெறுமதி சேர்வரி கொடுப்பனவுகள் மீதான மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட மொத்த பெறுமதி சேர் வரிகள் ரூபா 11.2 மில்லியனாக இருந்தது.

(ஆ) செயற்திட்டமானது 2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க அதிகாரசட்டங்களால் திருத்தப்பட்ட 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தகொடுப்பனவுகளில் 1 சதவீதம் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி கழிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டியதுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்திற்கு அனுப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9.3 மில்லியன் மொத்த ஒப்பந்த கொடுப்பனவுகள் மீதான வரி கழிக்கப்பட்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், கேள்வி உடன்படிக்கை கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் பதியப்பட வேண்டும். செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையில் கைசாத்திட்ட 02 ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை அவதானிக்கப்பட்டது.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 14,087 | 17,922 | 1,000 | 607.90 | 770.60 | 957.20 | 1,237.95 |
| இலங்கை அரசாங்கம் | 3,191 | 4,060 | 300 | 60.55 | 76.30 | 179.30 | 231.37 |
| மொத்தம் | 17,278 | 21,982 | 1,300 | 668.45 | 846.90 | 1,136.50 | 1,469.25 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 14,087 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியிலிருந்து 3 ஆண்டுகள் 3 மாதங்கள் கடந்த பின்னர் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,237.95 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 957.20 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ரூபா 1,300 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் 65.1 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,136.5 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, செயற்திட்டமானது ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதன்விளைவால், செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தியதைப்போல பௌதீக நடவடிக்கைகளில் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், கடப்பாட்டுக் கட்டணங்கள் நிதிகளின் பயன்பாடுகளில் மெதுவான முன்னேற்றம் காரணமாக ஒழுங்காக செலுத்தப்படுகின்றன. ஆகவே, பயன்படுத்பபடாத நிதிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 73.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 9.4 சதவீதம் மற்றும் 9.02 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகள் 04 பிரதான பொதிகளாக பிரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஜப்பான் யென் 12,636 மில்லியன் மற்றும் ரூபா 16,077 மில்லியன் தொகையாகும். அதில், மீளாய்வாண்டின் போது ஒரு பொதியின் சிவில் நிர்மாண வேலைகள் மாத்திரம் தொடங்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும்

சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வாறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 6.8 மில்லியனாகும்.

(ஆ) 2011 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த கண்டி நகர கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட செயற்திட்டத்தால் கண்டி நகரத்தில் நீரிறைக்கும் இல்லத்தின் நிர்மாணத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்கான இழப்பீடு 06 ஆண்டுகள் 09 மாதகால தாமதத்துடன் இந்த செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், அவற்றில் ரூபா 3.5 மில்லியன் வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 3.5 மில்லியன் கூட்டுத்தொகையான ஏனைய மிகுதி செலுத்த வேண்டியவைகள் போதிய விபரங்கள் இல்லாமலும் மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திடமிருந்து மாற்றப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி நிலமைக்கூற்றில் நடைமுறைப்பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**3.4 நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 4.35 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான கணப்பீட்டுச் சபை நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும், 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட வேண்டுமென வேண்டப்பட்ட நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.